செய்தி வெளியீடு எண்: 908 15.10.2010

# தமிழக அரசு போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு 8.33 சதவீத போனஸ்; 11.67 சதவீத ஊக்கத்தொகை!

# முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தமிழக அரசின் போக்குவரத்துக் கழகங்களில் 2006 முதல் எந்த நிலையிலும் கட்டணம் உயர்த்தப்படவில்லை என்றாலும்; போக்குவரத்துக் கழகங்கள் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருகின்றன என்றாலும்; கடந்த நான்கு ஆண்டுகளாக கலைஞர் அரசு போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்களுக்கு 8.33 சதவீத போனசும், 11.67 சதவீத ஊக்கத் தொகையும் தொடர்ந்து வழங்கி வருகிறது. இதன் அடிப்படையில் இந்த ஆண்டும் 1 இலட்சத்து 27 ஆயிரத்து 714 நிரந்தரத் தொழிலாளர்களுக்கு, 8.33 சதவீத போனசும், 11.67 சதவீத ஊக்கத் தொகையும் வழங்கிடவும்; 17 ஆயிரத்து 779 பதிலிப் பணியாளர்களுக்கு கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் போனஸ் வழங்கிடவும்; முதலமைச்சர் கலைஞர் இன்று (15.10.2010) ஆணையிட்டுள்ளார். இதன் காரணமாக அரசுக்கு 99 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவாகும்.

* * *

வெளியீடு:—இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9